1969 மார்ச் 15]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பால்பெருக்குத் திட்டத்தை ஊக்குவிக்கவேண்டுமென்ற அடிப்படையில் அது வைப்பட்டிருக்கிறது. உண்மையில தனிப்பட்ட வர்களுக்கு உட்சுசத்தை விடப்பட்டிருக்கிறது என்பது உண்மையானால்—அவர் எப்படிப்பட்டவர் ஆனாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் தயங்காது.

பல்லடம் சாலை—ஈஸ்வரன் கோயில் சாலை சந்திப்பு

*347 **வினா : திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள பிரதான சாலையான பல்லடம் ரோடும், ஈஸ்வரன் கோயில் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலையை விரிவு படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குறிப்பிடப்பட்ட திட்டம் ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகரத்தில் உள்ள பிரதான சாலை—பல்லடம் ரோடும், ஈஸ்வரன் கோவில் சாலையும் சந்திக்கும் இடம் மிகவும் முக்கியமானது. உடுமலைப்பேட்டை, தாராபுரம், போன்ற ஊர்களுக்குச் செல்லும் முக்கியமான இடம். அந்தச் சாலையில் இருக்கும் நெருக்கடி காரணமாக சமீபத்தில் கூட ஐந்தாறு பேர்கள் விபத்துக்குள்ளாயிருக்கிறார்கள். ஆகவே இனியாகிலும் அதை உடனடியாக விரிவுபடுத்தும் நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சந்திப்பில் பாதையின் அகலம் 55′, கழிவு நீர்க் கால்வாய் நீங்கலாக 47′, 48″ அகலம் இப்போதே இருப்பதனால், அந்தச் சந்திப்புச் சாலையை அகலப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. சு துரைசாமி : இப்போது அந்த இடத்தில் உள்ள நெருக்கடி அதிகமாக இருப்பதனாலும், இரண்டு லாரிகள் போனாலே 40′ போதாத நிலைமை இருப்பதனால்—இன்றைக்கு அது ஒரு பிரதான சாலையாக இருப்பதால், இனியாகிலும் அப்படியொரு திட்டத்தை அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 48′ அகலத்தில் மிகத் தாராளமாக வண்டிகள் போகலாம்.

நந்தியாறு கால்வாய்

*348—**வினா : திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, திருமழபாடி பகுதியிலுள்ள நந்தியாறு பாசன வாய்க்காலில் உள்ள அடிஓடை பாலம் மழையினால் அடித்துச் செல்லப்பட்டதன் காரணமாக பாதிக்கப்பட்ட விளை நிலம் எவ்வளவு ?

(இ) அதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் வகுக்கப்பட்டதா ?

(உ) அப்படியானால் அதன் உத்தேச செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) நந்தியாறு கால்வாயில் பாலக்கால் மழையினால் அடித்துச் செல்லப்பட்டமையினால் பயிரிடும் நிலங்கள் எவையும் பாதிக்கப்படவில்லை.

(இ) அண்டு (உ) இந்த பாலக்கால் ரூ. 1,98,000 தோராய செலவில் மீண்டும் கட்டப்பட்டுள்ளது.